## பாலிந்தனுவர பிரதேச சபை
## களுத்துறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 20 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலத்தில் வைத்திருக்கும் ரூபா 35,000 பெறுமதியான தராசு ஒன்று கணக்கிலிடப்படாமையால் இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனக் கணக்கு மீதி ரூபா 35,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன், மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கும் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) தொலந்துபோன நூலகப் புத்தகங்களின் பெறுமதியாகிய ரூபா 12,645 நிதிக்கூற்றுக்களில் அகற்றப்படாதிருந்தன.

(இ) 2016 டிசெம்பர் 22 ஆந் திகதி ரூபா 2,358,850 ஆகவிருந்த நேரடிச் செலவு வைக்கப்பட்ட தொகை பெறுவனவாகக் குறித்துக் கொள்ளப்படாததால் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மீதி ரூபா 2,358,850 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 66,705,732 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

---

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,692,354 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,737,061 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,955,293 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 20,681,195 அதிகரிப்பும் செலவினத்தில் ரூபா 15,725,902 அதிகரிப்பும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,955,293 அதிகரிப்புக்கான பிரதான காரணிகளாகும்.

**2. வருவாய் நிர்வாகம்**

---

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை**

---

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,289 | 1,983 | 557 |
| (ii) | குத்தகை வாடகை | 4,361 | 4,361 | 250 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 194 | 194 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 67 | 67 | - |

**2.2 தீர்வையும் வரியும்**

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 661,138 நிலுவை மீதியில் 56.8 சதவீதமான ரூபா 375,291 மாத்திரமே அறவிடப்பட்டு ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை மீதி ரூபா 493,536 ஆகவிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட தீர்வை வரி ரூபா 1,018,262 ஆகும். இதில் 75.2 சதவீதமான ரூபா 766,253 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

**2.2.3 ஏக்கர் வரி**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏக்கர் வரி நிலுவை மீதியான 31,648 தொகையில் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 24,604 அல்லது 77.7 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. நடப்பாண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 140,609 ஆகும். இதில் 64.8 சதவீதமான ரூபா 91,117 அறவிடப்பட்டு 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 52,364 ஆகவிருந்தது.

**2.2.4 குத்தகை வாடகை**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான குத்தகை வாடகை நிலுவை மீதி ரூபா 383,280 ஆகும். 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் இதில் 35 சதவீதமான ரூபா 133,642 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

**2.2.5 வர்த்தக வரி**

2016 ஆம் ஆண்டிற்கென வர்த்தக வரி சம்பந்தமாக சபையால் கணிப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தும் கணிப்பில் இனங்காணப்பட்ட வியாபாரங்களுக்கான வரியை அறவிட நடவடிக்கை எடுக்காமையால் பட்டியலிடப்பட்ட தொகை குறைவடைந்திருந்தது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 2,657,215 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,000,000 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

(அ) கடைகளைக் குத்தகைக்கு வழங்குதல் / காணியை வாடகைக்கு வழங்குதல்

(i) சபையால் 26 கடைகள் நபர்களுக்கு வழங்கப்படும்போது முறையான கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாததுடன், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்டவாறிருக்கும் இக்குத்தகை வாடகை உடன்படிக்கையின் மூலம் மாதாந்தம் அறவிடப்படும் தொகை ரூபா 3,000 ஆகும். மேலும், 2008 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏறக்குறைய 09 ஆண்டுகளாக இக்கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், மதிப்பீடு எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை.

(ii) பத்தாம் இலக்கக் கடையினது ஆரம்பக் குத்தகையாளர் வெளி நாடு செல்லவிருப்பதாகக் கூறி தமது குத்தகை உரிமையை இன்னுமொருவருக்கு வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டிருந்ததுடன், 2015 மே 14 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் இது ஏற்றுக் கொள்ளப்பட்டு, குறித்த ஒப்படைப்புக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தபோதும், 2017 யூலை 30 ஆந் திகதி முடிவடையும் குத்தகை உடன்படிக்கையும் பழைய குத்தகையாளரது பெயரிலேயே இருந்தது.

(ஆ) முற்பள்ளியிலிருந்து மாதாந்தக் கட்டணத்தை அறவிடுதல்

---

சபை இரு முற்பள்ளிகளை நடாத்தியிருந்தது. நலன்புரி நோக்குடன் நடாத்தப்படும் இப்பணிக்கு முரணாக ஒரு முற்பள்ளியிருந்து 2014 முதல் இற்றைவரை மாதாந்தக் கட்டணமாக ரூபா 500 வீதம் ரூபா 487,000 அறவிடப்பட்டிருந்தது.

(இ) பெல்லன நாரங்கஹவத்த காணியைக் குத்தகைக்கு வழங்குதல்

---

பாலிந்தனுவர பிரதேச சபைக்குச் சொந்தமான துன்ஹவுல் குறுந்துவத்த அல்லது நாரங்கஹவத்த எனப்படும் காணியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு மாதாந்தம் ரூபா 10,000 குத்தகை வாடகையுடன் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும் உடன்படிக்கை மூலம் நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முறையான கேள்வி நடைமுறைகளுக்குப் புறம்பாக இக்காணி குறித்த நபர்களுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், கேள்வி நடைமுறைகளின் பிரகாரம் கேள்விகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் திறத்தல் ஆகியவற்றிற்கான தினமான 2008 மார்ச் 12 ஆந் திகதியன்று இந் நபருக்கு மாத்திரம் கேள்வி கோரல் விண்ணப்பம் வழங்கப்பட்டிருந்தது. 2008 மார்ச் 11 தொடக்கம் குத்தகை உடன்படிக்கை அமுலாகியது.

(ii) பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1)(xi) / 19(1)(12) பிரிவின் கீழ் காணியைக் குத்தகைக்கு வழங்குவதற்குக் குறித்த அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

(iii) 2008 மார்ச் 11 முதல் 3 ஆண்டுகளுக்கொருமுறை புதுப்பிக்கப்பட்டவாறு 09 ஆண்டுகளாக அமுலில் இருந்த இக்குத்தகை உடன்படிக்கையில் காணியின் பெறுமதி அதிகரித்துச் செல்வது கருத்திற் கொள்ளப்பட்டு, புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, அதற்கமையப் பெறப்படும் வரியை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iv) 2014 முதல் குத்தகையாளர் வெளி நாடு செல்லவிருப்பதால் அவரால் பெயரிடப்படும் பிரத்தியேக கம்பனியுடன் உடன்படிக்கையில் ஈடுபடுமாறு சபைக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் 2014 மார்ச் 11 முதல் 2017 மார்ச் 10 வரை சபை குறித்த நபருடன் உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்தது. எனினும், 2017 மார்ச் 10 ஆந் திகதி முடிவடைந்த உடன்படிக்கையை முறையானவாறு அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான காணிகளும் கட்டிடங்களும்

-----------------------------------------------------------------------------------------

பிரதேச சபைக்குச் சொந்தமான 26 ஏக்கர் 34.68 பர்ச்சஸ் காணியைச் சுவீகரிப்பதற்கு சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(உ) கம்புராவல குடிநீர் செயற்திட்டம்

---------------------------------------------------------

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 4,209,754 செலவில் ஏறக்குறைய 300 குடும்பங்களுக்கு நீரை வழங்கும் நோக்குடன் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(i) இச் செயற்திட்டத்தின் கீழ் நீரிணைப்பு வழங்கப்படுகையில் இணைப்புக் கட்டணமாகிய ரூபா 5,000 அறவிடப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுப் பின்னர் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம் அத்தொகை ரூபா 8,000 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நீரிணைப்பு வழங்கப்பட்ட குடும்பங்களது கூறுகளின் எண்ணிக்கை 179 ஆவதுடன், ரூபா 2,000 முதல் ரூபா 5,000 வரை பல்வேறு

பெறுமதிகளிலான இணைப்புக் கட்டணம் பெறப்பட்டு இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) நீரிணைப்புக்குப் பயன்படுத்திய 10 பேர்ச்சஸ் காணியை முறைப்படி அங்கீகரிப்பதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஊ) விளம்பரப் பலகை வருவாய்

---

(i) முறையானதும் போதியதுமான தகவல்களை உள்ளடக்கியவாறு விளம்பரப் பலகை வருவாயைக் குறித்துக் கொள்வதற்கான வருவாய்ப் பதிவேட்டை சபை பேணியிருக்கவில்லை.

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 1940 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் / பிரசார அறிவித்தல்கள் மூலம் கட்டணத்தை அறவிடுவதற்கு 2016 ஆம் ஆண்டிற்கான கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

(எ) திட்டமிடல் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படாமை

---

2015 மே 15 ஆந் திகதியின் பின்னர் சபை முதலாவதாகத் திட்டமிடல் குழுக் கூட்டத்தை 2016 மார்ச் 23 ஆந் திகதியன்றே நடாத்தியிருந்தது. இக்காலப்பகுதியின்போது திட்டமிடல் குழுக் கூட்டங்கள் எதுவுமே நடாத்தப்படாது செயலாளரின் எண்ணப்படி 25 கட்டிட விண்ணப்பங்களும் 48 காணித் திட்டமிடல் விண்ணப்பங்களும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஏ) வருவாயை மதிப்பீடு செய்தல்

---

2016 ஆம் ஆண்டிற்கான வருவாயை மதிப்பீடு செய்கையில் JCB இயந்திரத்தின் மூலம் ரூபா 2,000,000 வருவாயை ஈட்டலாம் எனச் சபை மதிப்பீடு செய்திருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டில் சம்பாதித்த வருவாய் ரூபா 138,690 ஆகும்.

(ஐ) பெல்லன கோல்டன் பீல்ட் காணி

------------------------------------------------------------

இக்காணி சபைக்குச் சொந்தமான பொதுக் காணியாகியபோதும் அதனைச் சரிவர இனங்காண்பதற்கும் உரித்துறுதியைப் பெறுவதற்கும் நிலையான சொத்தாக அதனைப் பதிவு செய்யவும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவிலலை. கூட்டுறவுச் சங்கம் ஒன்று இக் காணியில் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. பின்னர் ரூபா 750 மாதாந்தக் குத்தகை வாடகைக்கு இதனைச் சபை குறித்த சங்கத்திற்கு வழங்கியிருந்தது. 2015 முதல் இது ரூபா 1,000 ஆக அதிகரிக்கப்பட்டபோதும், காணியைக் குத்தகைக்கு வழங்குவதற்கான சபையின் தீர்மானம் இருக்கவில்லை. மேலும், சங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கை 2016 டிசெம்பர் 31 அன்று முடிவடைந்து புதுப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஒ) பாடசாலைச் சிறுவர்களுக்குப் பாத அணிகளை வழங்குதல்

------------------------------------------------------------------------------------------------

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் குறைந்த வருவாயை ஈட்டும் குடும்பங்களது பிள்ளைகளுக்குப் பாடசாலைகளுக்கான பாத அணிகளை வழங்குவதற்கென 2016 டிசெம்பரில் 4,679 சோடிப் பாத அணிகள் கொள்வனவு செய்யப்பட்டு அதற்கு ரூபா 4,060,202 செலவிடப்பட்டிருந்தது. சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 35 பாடசாலைகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களுக்கமைய 4,679 சோடிப் பாத அணிகளுக்கான கட்டளை வழங்கப்பட்டபோதும், 4,326 சோடி பாத அணிகள் மாத்திரமே பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய 353 சோடிப் பாத அணிகளும் 2017 யூன் 29 ஆந் திகதியளவிலும் சபையிலேயே இருந்தன.

(ஓ) அறவிடப்படாத ஊழியர் கடன்

----------------------------------------------------

அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடனில் சேவை நீங்கிய 3 உத்தியோகத்தர்களது ரூபா 10,953 கடன் மீதியுமிருந்தது. இதனை அறவிடுவதற்கு 2017 யூன் 30 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஔ) பொருள் மெய்மையாய்வு

2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட ரூபா 12,217 பெறுமதியான 68 நூலகப் புத்தகங்கள் தொலைந்து போனது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(க) வாகனக் கட்டுப்பாடு

(i) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் வாகனங்களது எரிபொருள் பரிசீலிக்கப்படவில்லை.

(ii) வாகனத்தைப் பழுதுபார்க்கையில் அகற்றப்படும் உதிரிப் பாகங்களைப் பதிவு செய்வதற்கான பதிவேடு பேணப்படவில்லை.

(iii) சபைக்குச் சொந்தமான டிரெய்லர் ஒன்று 2011 ஆம் ஆண்டு தொடக்கமும் டிறக்டர் ஒன்று 2016 ஆம் ஆண்டு தொடக்கமும் செயலற்றவாறிருப்பது அவதானிக்கப்பட்டது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

**மாகேலி எல்லவுடன் இணைந்த பகுதியில் ஆரம்ப அடிப்படை வசதிகளை நவீனமயப்படுத்தல்**

இச் செயற்திட்டத்தின் கீழ் வாகனத் தரிப்பிடம், படிக்கட்டுகள், காட்சிகாண் நிலையம் என்பன பழுதுபார்க்கப்பட்டு ரூபா 2,827,474 செலவாகியிருந்தது. இதன்போது வாகனத்தரிப்பிடத்தைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 1,371,500 செலவிடப்பட்டபோதும், பதிக்கப்பட்ட கற்களில் பெரும்பாலானவை கீழிறங்கியிருந்தமை 2017 யூன் 29 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின் போது புலனாகியது.

## 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) தனது கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படி மேற்கொள்வதற்கான உப விதிகளைச் சபை ஏற்படுத்தவில்லை.

(ஆ) இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தராக சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த உத்தியோகத்தர் வாரத்தில் 3 நாட்கள் சபைக்குச் சமூகமளிக்க வேண்டியபோதும், 2016 ஆம் ஆண்டில் 14 நாட்களும் 2017 ஆம் ஆண்டில் 07 நாட்களும் மாத்திரமே அவர் சமூகமளித்த நாட்களின் எண்ணிக்கையாகும்.

(இ) இறுதியில் உலர்ந்து போகாதிருக்கும் கழிவுப் பொருட்களை அதிகாரத்துக்குட்பட்ட மலதுகல மலையில் சபை வெளியேற்றியபோதும், சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப்பத்திரம் இதன் பொருட்டுப் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கழிவுப் பொருள் சேகரிப்பிற்கென நாளாந்தம் ஊழியர்களைப் பணியிலமர்த்துவதைக் குறிக்கும் பதிவேடு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) பாதீடு

(ஈ) வாகனக் கட்டுப்பாடு

(உ) ஒப்பந்த நிர்வாகம்

(ஊ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்